**தலைப்பு 274 – அநுராதபுரம் மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 கணக்காய்வு அபிப்பிராயம்**

அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) அனுராதபுரம் மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளை போன்றுவற்றுக்கான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள், காசுக் கட்டளை பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 451 இல் காண்பிக்கின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது பதிவேடு நாளதுவரையாக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு

26 அமைச்சுக்கள், 19 திணைக்களங்கள் மற்றும் 01 அலுவலகம் என்பவற்றால் பல்வேறு பணிகளுக்காக முறையே ரூபா 4,300 மில்லியன், ரூபா 244 மில்லியன் மற்றும் 115 மில்லியன் என கூட்டுமொத்தமாக ரூபா 4,659 மில்லியன் நிதிஏற்பாடு ஏற்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் கூட்டுமொத்தமாக ரூபா 4,209 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 450 மில்லியன் அதாவது 9.6 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நீதி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 121,817,000 தொகை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களில் இருந்து கிடைக்கின்ற நிதிஏற்பாட்டை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக தேவையான திட்டங்கள், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி ஆண்டின் போது நிறைவேற்றுவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதி மாதத்தில் காணப்பட்ட கட்டுநிதி பற்றாக்குறையின் அடிப்படையில் இந்த நிதிஏற்பாட்டை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் இந்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் கையிலுள்ள பட்டியல்களுக்காக 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு, மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் 50 சதவீதத்தை விட குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களில் இருந்து கிடைக்கின்ற நிதிஏற்பாட்டை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக தேவையான திட்டங்களை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி ஆண்டின் போது நிறைவேற்றுவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதி மாதத்தில் காணப்பட்ட கட்டுநிதி பற்றாக்குறையின் அடிப்படையில் இந்த நிதிஏற்பாட்டை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் இந்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் கையிலுள்ள பட்டியல்களுக்காக 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளது. |
| (இ) சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களில் இருந்து கிடைக்கின்ற நிதிஏற்பாட்டை | 2018 ஆம் ஆண்டின் இறுதி மாதத்தில் காணப்பட்ட கட்டுநிதி பற்றாக்குறையின் அடிப்படையில் இந்த |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட ரூபா 4,360,900 தொகையான மூலதன நிதிஏற்பாடுகளில் ரூபா 4,036,611 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக தேவையான திட்டங்களை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி ஆண்டின் போது நிறைவேற்றுவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | நிதிஏற்பாட்டை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் இந்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் கையிலுள்ள பட்டியல்களுக்காக 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளது. |

**2.2 முற்பணக் கணக்கு மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை நீக்கஞ்செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1.97 மில்லியனாக இருந்ததுடன் அந்தக் கடன் மீதியில் 05 வருடங்களை விட மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதி ரூபா 1.5 மில்லியனாக இருந்தது. | உரிய கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொரு கடன் மீதியையும் அறவிடுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மாகாண சபை நிறுவனங்களுக்கு பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 60,418 தொகையான கடன் மீதி 05 வருட காலத்தை விஞ்சியிருந்த போதிலும், அந்தக் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து தீர்க்கப்படாத ரூபா 61,335 | உரிய கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| தொகையான கடன் மீதி 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 02 வருட காலத்தைக் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தில் நிதி நிர்வாகத்திற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறையின் வினைத்திறன் தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வைச் செய்து கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றமைக்கும், அந்த மீளாய்வை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 165.2(அ) | 538,200 | 02 பிரதேச செயலகங்களில் மொத்தமாக 48 சந்தர்ப்பங்களின் போது அஞ்சல் அலுவலகங்கள் மூலம் செலுத்தப்படாமல் மீள அனுப்பப்பட்ட ரூபா 538,200 கூட்டுத்தொகையான முதியோர் படி காசுக் கட்டளை, காசுக் கட்டளை பதிவேட்டில் உள்ளடக்கப்பட வில்லை. | நிதிப்பிரமாணம் 165.2(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட ரூபா 306,400 தொகைக்குரிய பணம் தொடர்பாக காசுக் கட்டளைப் பதிவேட்டில் குறிப்பிடப் படாதிருந்ததுடன் தற்போது அதனைப் பதிதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 316 | | ஹொரொவபொத்தான பிரதேச செயலகத்தின் ஒரு புத்தகத்தின் பெறுமதி ரூபா 20,000 தொகையான கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படுகின்ற 61 முத்திரைக் புத்தகங்கள் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாப்பாக காப்பகத்தில் வைக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 316 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | போசணைப் படி முத்திரை புத்தகம் அலுமாரியில் பாதுகாப்பாக வைப்பதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அலுமாரியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் மேலதிகம் 21 மற்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2014 மே 29 ஆந் திகதிய PFP/PMD/GEN/003 ஆம் இலக்க கடிதம் | | மதிப்பீடு ரூபா 5,401,935 தொகையான ஹொரொவபொத்தான பிரதேச செயலகப் பிரிவில் தியதித்தவெவ புதிய கிரமத்தின் நீர் செயற்திட்டத்தின் மதிப்பீட்டு பகுதி 3 இற்கு ஒதுக்கப்பட்டு சமூக அமைப்புக்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட | போட்டியாளர் கூறுவிலையின் கீழ் உரிய நிர்மாணங்களை மேற்கொள்வதற்காக அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் PEP/PMD/GEN/003 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் | ஏற்றுக் கொள்கின்றோம். பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.4.2(அ) பந்தியின் பிரகாரம் இந்த ஒப்பந்தம் இவ்வாறு 03 பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பெறுமதியில் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | எடுக்க வேண்டும். | |
| (ஈ) | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சுச் செயலாளரின் 2016 சனவரி 12 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | | ஹொரவொப்பொத்தான பிரதேச செயலகம் செலுத்தாத முதியோர் படி பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். உரிய காசுக் கட்டளை விடயப் பொறுப்பு உத்தியோகத்தரினால் பொது 118 படிவத்தில் குறிப்பிட்டு காசாளருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | திவிநெகும பணிப்பாளர் நாயகத்தின் 2016/05 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2,955,000 | சமூகப் பாதுகாப்பு நலனாளிகளின் மரணத்தின் போது மரணச் சடங்கு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்குமுன் நலன் தொகை செலுத்த வேண்டிய போதிலும் 06 பிரதேச செயலகப் பிரிவுகளில் 197 நலனாளிகளுக்கான நலன்களைச் செலுத்தும் போது கவனத்தில் கொள்ளக்கூடிய காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.03.07 ஆந் திகதிய அனு/திலே/2/16/1/52 ஆம் இலக்க கடிதத்தில் தாமதமாகிய மரண நலன்தொகையை நலனாளிகளுக்கு வழங்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது. |
| (ஊ) | திவிநெகும பணிப்பாளர் நாயகத்தின் 2016/03 ஆம் மற்றும் 2017/06 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கலன்பிந்துனுவெவ, மிஹிந்தலை மற்றும் பலாகல பிரதேச செயலகப் பிரிவுகளில் திவிநெகும ‘‘சிப்தொற’’ புலமைப்பரிசில் நிதியம் தாமதமின்றி செலுத்த வேண்டியிருந்த போதிலும், 01 மாதம் முதல் 02 வருடங்கள வரை தாமதித்து செலுத்தப்பட்டிருந்த | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல்வேறு விடயங்களின் அடிப்படையில் அந்த பரிந்துரையாளர்களினால் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக குறித்த ரீதியில் செலுத்துதல் தாமதமாகியிருந்தது. எனினும், தற்போது சரி செய்யப்பட்டுளது. |

து.

## 2.5 மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 இல் மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் கலன்பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவில் உட்டியக் குளம் ஸ்ரீ மிகிந்து அறநெறிப் பாடசாலைக்கு லெப்டொப் கணனி வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 205,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் பெறப்பட்ட ரூபா 199,500 பெறுமதியான 03 லெப்டொப் கணனிகள் செயற்திட்டத்திற்காக நிதியேற்பாட்டை வழங்கிய கௌரவ உறுப்பினர்களின் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலையின் பிரதான போதகரினால் அந்த லெப்டொப் கணனி தனிப்பட்ட பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிதி ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட செயற் திட்டங்களில் இருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை வலுப்படுத்த வேண்டும். | இதுவரையில் 03 லெப்டொப் கணனிகளும் பிரதான போதகர் விமலாவதி அவரினால் பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் கணனி தற்போது செயல்படு நிலையில் காணப்படுகின்றது. எனினும், உத்தரவாத காலத்தின் போது எந்த ஒரு தொழில்நுட்ப கோளாறுகளுக்கும் உட்படுமாயின் மீண்டும் பழுதுபார்த்தலுக்காக ஏற்படுகின்ற செலவினங்களை ஸ்ரீ மிகிந்து அறநெறிப் பாடசாலையின் பிரதான போதகர் விமலாவத்தி அவரிடமிருந்து அறவிடுவதற்கு பிரதேச செயலாளரினால் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 பிரதான பணிகளுக்கு முரணான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இடர்களைக் குறைப்பதற்கு பங்களிக்கும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 11.26 மில்லியன் தொகை 03 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களுக்கு அனர்த்த இழப்பு ஆபத்து அல்லது | இடர்களைக் குறைப்பதற்கு கிடைத்த நிதி ஏற்பாட்டை இடர் இழப்புக்கள் ஏற்படுகின்ற பிரதேசங்களில் அதற்குரிய செயல்திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்துவதற்காக | இந்த சகல செயற்திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு முன் மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையம் மற்றும் உரிய பிரிவுகளின் பிரதேச செயலாளர்களின் பங்குபற்றுதலுடன் பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்களினதும் |

| | | |
|---|---|---|
| இடர்களுக்கு உட்படாத சாதாரண வீதிகளை மீளமைப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. | பயன்படுத்த வேண்டும். | அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் சந்திப்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அந்த முன்மொழிவுக்குரிய பிரிவுகள் என்ன என்பது தொடர்பாக கண்டறியப்பட்டதுடன் அதன் போது அந்த உத்தியோகத்தர்களின் அவதானிப்புக்களுடன் துறையின் அவதானிப்புக்களையும் மேற்கொண்டு அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெறப்படாமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஹொரவொப்பொத்தான பிரதேச செயலகப் பிரிவில் தியத்தவெவ புதிய கிராமத்தில் நீர் செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக ரூபா 1,039,947 தொகையான பெறுமதியில் கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கிணற்றின் நீர் குடிப்பதற்கு பொருத்தமான நியமத்தில் இல்லாமையினால் செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு செயற்திட்டத்தின் வினைதிறனை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அமுல்படுத்த முடியுமான செயற்திட்டத்தை மாத்திரம் செயற்படுத்த வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியும். |
| (ஆ) அனுராதபுரம் பொதுச் சந்தை வளவில் மீன் கடைத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 6.35 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு செயற்திட்டத்தின் விளைதிறனை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அமுல்படுத்த | இந்த மீன் கடையாக உத்தேசிக்கப்பட்ட 16 கடைகள் அனுராதபுரம் மாநகர சபையின் முன்மொழிவின் பிரகாரம் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அனுராதபுரம் நகர ஆணையாளரின் 2016.01.07 ஆந் திகதிய |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்படுகின்றன.<br>• இந்த நிர்மாணத்திற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br>• எதிர்பார்த்த திட்டங்களுக்கும் பொறியியலாளர் நியமங்களுக்கும் உரியதாக காணப்படவில்லை.<br>• பொதுச் சந்தை மக்களின் தேவைகளுக்கு இணங்கியதாக இருக்கவில்லை.<br>• இந்த கடைத்தொகுதி எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் முழுமையாக உடைத்து அகற்றப்பட்டிருந்தது. | முடியுமான செயற்திட்டத்தை மாத்திரம் செயற்படுத்த வேண்டும். | கடிதத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது இதற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கடைகளை மீன்கடையாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.3 செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 இன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கலன்பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 187 துலானயில் முறியாகடவல குடிநீர் செயற்திட்டத்திற்காக ரூபா 1,500,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மின்சார சபையுடன் கலந்துரையாடி துரிதமாக வசதிகளைப் பெற்று செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நிலைக்கு உட்படுத்த வேண்டும். | இந்த பிரதேச செயலப் பிரிவின் இலக்கம் 187 முறியாகடவல துலானையில் நீர் செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்திற்கு மின்சாரம் இல்லாமையின் காரணமாக உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்தவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) கல்னேவ பிரதேச செயலகப் பிரிவில் அவுக்கன புகையிரத நிலையத்திற்கு அருகில் பூங்காவை நிர்மாணிப்பதற்காக ரூபா 85,395 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், புகையிரத பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசத்தில் நிர்மாணங்கள் புகையிரதத் திணைக்களத்தால் தடைசெய்யப்பட்டதன் | சாத்திய வள ஆய்வு மேற்கொண்டு நிர்மாணங்களை மேற்கொள்வதற்கான இயலுமையை இனங்கண்டு செயற்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது தேவையான அங்கீகாரத்தை புகையிரதத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு தாமதமடைந்ததன் காரணமாக ஆண்டின் |

| | | |
|---|---|---|
| காரணமாக செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | | இறுதியின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அதனால் இது வரையிலும் 2019 ஆம் ஆண்டிற்காக தொடர் வேலை செயற்திட்டமாக அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. |

**3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டிற்கு முன் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டிருந்த தமுத்தேகம கலாசார நிலையத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 6,690,758 தொகையில் நிர்மாண நிறுவனமொன்றிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கைக்குரிய மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 17 வேலை விடயங்களும் முழுமையாக கைவிடப்பட்டு மேலும், 15 வேலை விடயங்கள் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், பாவனைக்கு எடுக்கக் கூடிய நிலையில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம் செயற்திட்டத்திற்கான மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை கட்டமாக அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு நிதிஏற்பாடு பெறப்பட்டு குறித்துரைத்த காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது தொழில்நுட்ப தேவையின் பிரகாரம் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. வேலையினைப் பூர்த்தி செய்வதற்காக தற்போது செயற்திட்டத்தின் மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) கலன்பிந்தனுவெவ பிரதேச செயலகப் பிரிவில் அஸ்வயாபெந்திவெவ குடிநீர் செயற்திட்டத்தின் நீர்த்தாங்கியை நிர்மாணிப்பதற்கும் நீர்க் குழாய்களை பதிப்பதற்கும் கூட்டுமொத்தமாக ரூபா 18,774,616 தொகையான | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 இன் பிரகாரம் செயற்திட்டத்திற்கான மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு | அஸ்வயாபெந்திவெவ நீர் செயற்திட்டம் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் பரிசோதனையொன்று நடாத்தப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் ரூபா 2.99 மில்லியன் தொகையொன்று |

| | | |
|---|---|---|
| செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இதன் மூலம் குடிநீர் வழங்கும் தேவை நிறைவேற்றப்படவில்லை | அதனை கட்டமாக அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு நிதிஏற்பாடு பெறப்பட்டு குறித்துரைத்த காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மூலம் உரிய செயற்திட்டத்தின் குறைபாடுகள் சீராக்கப்பட்டு 2019 ஆகஸ்ட் மாதமளவில் நலனாளிகளுக்கு நீரை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

### 3.5 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வடமத்திய மாகாணத்தின் உலர் காலநிலை தாக்கமளித்த பிரதேசங்களில் வரண்டு போயுள்ள பயிர்ச்செய்கை கிணறுகளை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு ஸ்தாபிக்கப்பட வேண்டிய குடிநீர் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக அநுராதபுரம் மாவட்ட செயலாளருக்கு ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவைகள் பிரதேச செயலாளர் மட்டத்தில் மீளமைக்கப்பட வேண்டிய 1860 கிணறுகளை மீளமைப்பதற்காக ரூபா 39.3 மில்லியன் தொகையான நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், காணப்பட்ட அதிக வறட்சி நிலை முடிவடைந்து மழை கிடைப்பதற்கு முன் முறையான பிரகாரம் திட்டத்தைத் தயாரித்து உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தவறியமையின் காரணமாக ரூபா 11.5 மில்லியன் தொகையான செலவினங்களைச் செய்து 560 விவசாயக் கிணறுகள் மாத்திரம் | பிரதேசத்தில் மழை காலம் வருவதற்கு முன் மழையின் அனுபவத்துடன் இனங்காணப்பட்ட குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | இந்த நிதிஏற்பாட்டுப் பணம் நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சினால் 2018.09.11 ஆந் திகதிய கடிதம் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அக்கம்பனி அந்த நிதியேற்பாட்டிற்குரிய பிரதேச செயலாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒக்தோபர், நவம்பர் மாதங்களில் காணப்பட்ட மழை நிலைமையினால் இந்த கிணறுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணம் 100% ஐயும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலும், மழை காலம் ஆரம்பித்ததுடன் நீர் தேவை பூர்த்தியாகின்றமையும் இந்த பணம் செலவிடப்படாமைக்கு மேலும் ஒரு காரணமாக இருந்தது. |

மீளமைக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஆ) மிஹிந்தலை பிரதேச செயலகப் பிரிவில் 10 நலனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக ரூபா 100,000 செலுத்தப்பட்டிருந்த போதும், அந்த நலனாளிகள் குறித்த பயிற்சியினைப் பெற்று சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்கவில்லை. | வேலையற்ற நலனாளிகளை சரியாக இனங்கண்டு நலனாளிகளின் பெயர் பட்டோலையில் அங்கீகரிக்கப்பட வேண்டும். | 02 சந்தர்ப்பங்களின் போது 09 பயிற்சி பெறுநர்கள் வீதம் பெயரிடப்பட்டு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு அனுப்பப்பட்ட போதும், அவர்கள் அதற்காக முறையான பிரகாரம் சமூகமளிக்காமையினால் மீண்டும் மூன்றாவது தடவையாகவும் 09 நலனாளிகள் பயிற்சிக்காக சமூகமளித்திருந்தனர். இதுவரையில் அவர்களின் பயிற்சி ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 3.6 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மூலம் அனுராதபுரம் மாவட்டத்தில் விவசாய உபகரணங்களை பகிர்ந்தளிப்பதன் கீழ் ரூபா 4,361,800 பெறுமதியான 243 மின் மோட்டார்கள் பெறுகை நடைமுறைகளில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளின் தேவைகளுக்கு இணங்காத வகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை நடைமுறைகளில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிகளின் பிரகாரம் செயல்படுத்துவதற்கு இணங்கிய கேள்விதாரர்களினால் அவர்கள் இணங்கிய மாதிரிகளின் பிரகாரம் வழங்கல்களைப் பெற்று அவற்றை நிதிப்பிரமாணம் 237(அ) இன் பிரகாரம் பெறவேண்டிய சான்றிதழைப் பெற்று கொடுப்பனவு செய்ய வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப அறிக்கையில் FMRC சான்றிதழ் மற்றும் உரிய வழங்குனர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், எதிர்பார்க்கப்பட்ட மாதிரியின் அதன் பிரகாரம் உறுதிப்படுத்தப் பட்டமையால் உரிய கம்பனிக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் மீளச் செலுத்தும் போது 5 சதவீத நிறுத்தி வைத்தல் பணம் பெறப்பட்டு இருந்ததுடன் இந்தத் தொகை இதுவரையிலும் |

| | | |
|---|---|---|
| | | விடுவிக்கப்படவில்லை. |
| (ஆ) மாவட்ட செயலகத்திற்கான 80 விரிவுரை மண்டபக் கதிரைகள் எதிர்பார்த்த மாதிரிகளுக்கு இணங்க ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரரிடம் இருந்து கொள்வனவு செய்யாமையினால் ரூபா 225,182 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாதிரிகளுக்கு இணங்குகின்ற மற்றும் நிகழ்ச்சிகளின் பயன்பாட்டிற்கு பொருத்தமான பிரகாரம் கூறுவிலை சமர்ப்பித்த விரிவுரை மண்டப கதிரைகளைக் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலாளருக்கு சொந்தமான அரசாங்கத்தின் 15 விடுதிகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வடமத்திய மாகாண சபையின் உத்தியோகத்தரின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. அந்த விடுதிகளில் இருந்து தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் வாடகை அறவிடல் மாவட்ட செயலாளரால் மேற்கொள்ளப்படவில்லை. இந்த விடுதிகளின் வசிப்பிடக் காலம் 05 வருடங்களின் எல்லையினை விஞ்சிய பின்னர் உரித்தை மீள கையேற்பதற்கான உள்ளகக் கட்டுப்பாடு மாவட்ட செயலாளரால் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக அந்த விடுதிகளின் நிர்வாகம் மாவட்ட செயலாளரிடமிருந்து விலகி இருந்தது. எவ்வாறாயினும், இந்த விடுதிகளுக்காக ஆதனவரி செலுத்துதல் மாவட்ட செயலாளர் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகை அறவிடல் மற்றும் மாவட்ட செயலாளருடன் விடுதி நலனாளி கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரித்தை மீளக் கையளித்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 05 வாகனங்களின் | ஒவ்வொரு வாகனங்களினதும் | பதிலளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பதிவுச் சான்றிதழ்களின் மூலப் பிரதி அலுவலகத்தில் காணப்படவில்லை | பதிவுச் சான்றிதழ்களின் மூலப் பிரதியை பெற்று பொறுப்பில் வைக்கப்பட வேண்டும். | |
| (இ) | மாவட்ட செயலகத்திற்காக குத்தகை அடிப்படையின் கீழ் பெறப்பட்ட 09 வாகனங்களுக்கு குத்தகைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், உரித்து மாவட்ட செயலகத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | குத்தகை தவணைப் பணம் செலுத்தி முடிவடைந்ததும் உடனடியாக பதிவின் உரித்தை மாவட்ட செயலாளரின் பெயருக்கு பெறப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹொரவொப்பத்தான பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் மேலும் ரூபா 210,872 தொகையை அறவிட்டு தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2010 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்படுகின்ற இந்த முற்பணத்தை துரிதமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஹொரவப்பொத்தான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை கலைப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் இந்த தீர்க்கப்படாத முற்பணத் தொகையை, கலைக்கின்ற போது கிடைக்கின்ற தொகையிலிருந்து முன்னுரிமை வழங்கி தீர்க்குமாறு வடமத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எனக்கு அறிவித்திருந்தார். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தில் காணப்பட்ட ஆயுதக் களஞ்சியத்தில் பின்வரும் நிர்வாகக் குறைபாடுகள் காணப்பட்டன. | | |
| (i) | மாவட்ட செயலக வளவில் உள்ள ஆயுதக் களஞ்சியத்தில் கையேற்ற திகதி, கிடைத்த காரணம் மற்றும் ஆயுதங்களின் இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய தகவல்கள் | பெறுகை விநியோகித்தல் மற்றும் வெளியில் காணப்படுகின்ற ஆயுதங்கள் தொடர்பாக | ஆயுதக் களஞ்சியத்தின் தகவல் பதிவேடொன்று முன்னர் பேணப்படாதிருந்ததுடன் 2012.10.23 ஆந் திகதியின் பின்னர் தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேடுகளுக்குக் கொண்டுவராத 388 பழைய ஆயுதங்கள் காணப்பட்டன. | இனங்காணக்கூடிய வகையில் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டும். | ஆவணப்படுத்தப் பட்டிருந்தது. எதிர்வரும் 03 மாத காலத்தில் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாத பாதுகாப்பகத்தில் உள்ள ஆயுதங்களின் தகவல்களை பதிவேடுகளுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | பேணப்பட்ட பதிவேட்டின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் பின்னர் மாவட்ட செயலகத்திற்கு கையேற்கப்பட்ட ஆயுதங்களில் 203 ஆயுதங்களின் மீதி ஒன்று 2019 சனவரி 30 கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு காணப்பட வேண்டிய போதிலும், அத்திகதியில் களஞ்சியத்தில் உள்ள ஆயுதங்களில் 167 ஆயுதங்களை மாத்திரமே இனங்காணக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் 36 ஆயுதங்களின் பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டது. | பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2012.10.23 ஆந் திகதியின் பின்னர் அரசாங்கத்திற்குக் கையேற்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான தகவல்கள் பதிவேட்டின் பிரகாரம் கையேற்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை 191 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் பாவனைக்குப் பொருத்தமற்ற 30 ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டதாக பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 03 ஆயுதங்கள் தொடர்பான தகவல்கள் இரு தடவைகள் வீதம் பதியப்பட்டிருந்தது. |
| (iii) | 2018 செப்தெம்பர் 11 ஆந் திகதிய MOD/CTS/12/FA/14 ஆம் இலக்க பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்ட 241 ஆயுதங்களுக்காக வருடாந்த அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை. | பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 15 பிஸ்டோல்கள் யுத்த சந்தர்ப்பத்தின் போது பிரதேச செயலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு அந்த பிஸ்டோல்கள் மீளப்பெறப்படவைகள் அவைதானா என கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் 500 துப்பாக்கி ரவைகளும் அக்காலப்பகுதியில் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது என அனுமானிக்க முடியும். |
| (iv) | தனியார் பாதுகாப்பு கம்பனிக்கும் அரசாங்க வங்கிக்கும் விவசாயமல்லாத செயற்பாடுகளுக்காக | பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 இன் ஆயுத அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு கையளிக்கப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த 25 ஆயுதங்களுக்கு உரிய பிரகாரம் வருடாந்த அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | விண்ணப்பப் பத்திரம் குறைபாடுகளுடன் காணப்பட்டமையால் ஆயுத அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல் தாமதமாகி இருந்தது. 2019.05.23 ஆந் திகதி வரையிலும் புதுப்பிக்கக்கூடிய சகல விண்ணப்பங்களுக்காகவும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மதவாச்சி பிரதேச செயலகத்திற்காக புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது பின்வரும் ஒப்பந்த நிர்வாக நலிவுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 4 கட்டங்களின் கீழ் கிரயம் ரூபா 47.84 மில்லியன் செலவான மதவாச்சி பிரதேச செயலக கட்டிடம் 2018 மே 30 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கட்டிடத்திற்காக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வருடமொன்றிற்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும், அதனை பொதுமக்கள் உரித்திற்கு கையளிப்பதற்கு முடியாதிருந்தது. | நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களை விரைவாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கட்டிடத்திற்காக மூன்று சுற்று மின் வழங்கல் இணைப்பை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் போது உரிய கட்டிடத்திற்கு மாத்திரம் அல்லாமல் காணியில் உள்ள சகல கட்டிடங்களுக்காகவும் பட்டய மின் பொறியியலாளர் சான்றிதழ் ஒன்று பெறவேண்டி இருந்தமையின் அடிப்படையில் பழைய கட்டிடத்திலும் மின் இணைப்புக்களை நவீன மயப்படுத்த வேண்டியிருந்ததுடன் தற்போது அந்த சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டு 2019.05.14 ஆந் திகதி புதிய கட்டிடத்திற்கான மின்சார வழங்கல் பெறப்பட்டுள்ளது. |
| (ii) | 4 ஆவது கட்டத்தின் நிர்மாணங்களில் கட்டிடங்களின் உள்ளே பிரித்து வேறுபடுத்தும் (Partition) மதிப்பீட்டில் குறிப்பாக காண்பிக்கப்பட்டுள்ள மூலப் பொருளுக்குப் பதிலாக அப் பகுதிச் சந்தையில் 50 சதவீத அளவான விலை | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் பெறுகைக் குழுவும் அங்கீகரித்த மாதிரிகளின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதாக செயல்திட்டத்திற்குப் பொறுப்பான | போதியளவான பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்த வேறு மூலப்பொருள் ஒன்று பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் கொடுப்பனவு செய்யும் போது பயன்படுத்த வேண்டிய மற்றும் பயன்படுத்தப்பட்டிருந்த மூலப் பொருட்களின் விலைப் பகுப்பாய்வு மேற்கொள்ளாதும் இடம்பெற்ற வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளாமலும் ரூபா 3,525,113 தொகையான மதிப்பீட்டு தொகை முழுமையாக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | பொறியியலாளரால் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு மாற்றமான மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யும் போது கூறுவிலைகளின் நியாயத்தன்மை பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | |
| (ஈ) | திறப்பனை, பலுகஸ்வெவ, ஹொரவப்பொத்தான மற்றும் மிஹிந்தலை போன்ற 04 பிரதேச செயலகப் பிரிவுகளில் அரசாங்கத்தின் காணிகளில் குடியிருந்து வருகின்ற மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு வழங்குவதற்காக சனாதிபதியால் கையொப்பிடமிடப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த 536 படிப் பத்திரங்கள் கிடைத்து நீண்ட காலமாக உரிய நலனாளிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிமேதகு சனாதிபதி கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட படி பத்திரங்களை உடனடியாக உரித்தாளிகளுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | பகிர்ந்தளிக்கப்படாதிருந்த படிப் பத்திரங்களுக்கிடையில் படி பத்திர நலனாளிகள் மற்றும் உரித்தாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள படி பத்திரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | மதவாச்சி பழைய உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அமைந்துள்ள காணி வெளித்தரப்பினரால் அனுமதியற்ற வகையில் நீண்டகாலமாக குடியிருந்து வருவதுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் அந்தக் காணியில் 40 பேர்ச் நீண்ட கால குத்தகை அடிப்படையில் குடியிருப்பாளருக்கு கையளிப்பதற்கு காணி ஆணையாளர் பரிந்துரை செய்திருந்தார். எனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்தக் காணியின் எஞ்சிய பகுதிகளை விடுவித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | காணி ஆணையாளரின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 40 பேர்ச்சுக்காக நீண்ட கால அனுமதிப்பத்திரம் வழங்கி எஞ்சிய காணிப்பகுதியை விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டரீதியாக காணியை உரிய குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்த பேதிலும், தேவையான விண்ணப்பபத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கு தாமதித்தமையின் காரணமாக இந்த நடவடிக்கைகளைச் செய்வதற்கு முடியாதிருந்ததுடன் 2019.04.30 ஆந் திகதி காணப்பட்ட காணி மெய்மையாய்வின் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட கடன் உத்தேசத்திட்டம்<br>--------------------------------------------------------<br>மாவட்டத்தில் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் 06 கடன் உத்தேசத் திட்ட முறைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக ஆரம்ப நிதியாக ரூபா 19,661,100 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடனை அறவிடுவது தொடர்பாக முறையாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட கடன் உத்தேச திட்டங்களில் வழங்கப்பட்ட கடன் தொகையில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட கடன் ரூபா 10,528,860 தொகை, சுழற்சிக் கடன் ரூபா 1,351,927 தொகை மற்றும் விதவைகள் மற்றும் வீட்டுத் தலைவிகளை வலுவூட்டும் செயற்திட்டக் கடன் ரூபா 491,366 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 12,372,154 நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவைக் கடனை அறவிடுவதற்கான போதியளவான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | இது தொடர்பான கடந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டத்தின் போதும் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்வரும் 03 மாதங்களுக்குள் இது தொடர்பான முழுமையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு அறிக்கை தயாரிக்கப்படும். |
| (ii) | கால்நடை வள கடன், கடற்றொழில் கடன் மற்றும் வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்துள்ள பெண்களின் மாற்றுவழி வருமான உழைப்பு கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாவட்டத்தில் எவ்வளவு கடன் தொகை விநியோகிக்கப்பட்டுள்ளது எனவும், கடன் மற்றும் வட்டி அறவிடலின் செயல்முன்னேற்றத்தை உள்ளடக்கிய தகவல்கள் எதுவும் மாவட்ட மகளிர் அலுவல்கள் உத்தியோகத்தர்களின் பொறுப்பில் காணப்படவில்லை. | கடன் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை செய்வதற்கு இயலுமான வகையில் முறையான அறிக்கை வைத்துக்கொள்ள வேண்டும். | இந்தஅறிக்கையை முறைமைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கவேண்டி இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக மாவட்ட செயலகத்தினால் தமது விடயப்பரப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய தமது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அதற்குரிய செயற்பாடுகளை உள்ளடக்கப்பட்டமையையும், வருடாந்த பாதீட்டில் போதியளவான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டமையையும் இனங்காண முடியாதிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொண்டு எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களினதும் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர்களினதும் மரணத்தின் போது அவர்களின் குடும்பங்களில் உள்ள பராயமடையாதோருக்காக ஏற்படுத்தப்படுகின்ற வைப்புக்கள் உரிய பராயமடையாதோரின் வயது பூர்த்தியாகி இருக்கும் போது 03 பிரதேச செயலகங்களில் 07 வைப்பாளர்களின் கணக்குப் | உரிய பிரகாரம் பதிவேடுகளைப் பேணி முதிர்ச்சி அடைதலை இனங்கண்டு உரிய நலனாளிகளுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது பராயமடையாதவர்களின் கணக்கு உரிமையாளர்களின் வயது பூர்த்தியாகும் போது உரிய கணக்குப் புத்தகங்களை கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதை இலகுபடுத்தும் வகையில் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

புத்தகங்கள்
உரிமையாளர்களுக்கு
விடுவிக்கப்படவில்லை.